# SSR-2024 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் வழிக்காட்டு நெறிமுறைகள்

1. சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2024 வாக்காளர் பட்டியலில் பெயர், சேர்த்தல், நீக்கல், திருத்தம் ஆகியவை வருகின்ற நவம்பர் மாதம் 4.11.2023, 5.11.2023 மற்றும் 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது .
2. முகாம் நடைபெறும் தினங்களை பொது மக்களுக்கு முன்கூட்டியே தகவல் அறிவிக்க வேண்டும்.
3. முகாம் நடைபெறும் அன்று அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் வாக்குச்சாவடியில் இருத்தல் வேண்டும்.
4. முகாம் நடைபெறும் அன்று அனைத்து விதமான படிவங்களும் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
5. முகாம்களில் பெறப்பட்ட படிவங்களுக்கு தகுந்த ஆதாரங்கள் உள்ளதா என்பதை சரிபார்த்து வாங்க வேண்டும்.
6. **முகாம்களில் பெறப்பட்ட படிவங்களை எல்லாம் BLO app-ல் மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்யத்தெரியவில்லை என்றால் நேரடியாக வட்டாட்சியர் அலுவலகம் தேர்தல் பிரிவிற்கு சென்று பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்**.
7. முகாம்களில் எத்தனை படிவங்கள் வந்துள்ளன என்பதை மாலை 5.00 மணிக்குள் வருவாய் ஆய்வாளரிடமோ அல்லது மேற்பார்வையாளரிடமோ படிவம் மற்றும் வயது வாரியாக புள்ளியை கொடுக்க வேண்டும்.

8. முகாம்களில் பெறப்பட்ட **படிவங்களை BLO app-ல் பதிவேற்றம் செய்து Reference number** எழுதி படிவங்களை தாங்கள் கொடுத்த புள்ளிகளோடு வட்டாட்சியர் அலுவலகம் தேர்தல் பிரிவில் ஒப்படைக்க வேண்டும்.
9. முகாம்களில் பெறப்பட்ட படிவங்கள் 6,7,8 ஆகிவற்றிற்கான சுருக்க படிவங்கள் 9,10,11,11A,11B ஆகியவற்றை முறையாக பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.
10. ஒரு முகாம்களில் பெறப்பட்ட படிவங்களை நிலுவையில் வைக்காமல் படிவங்கள் அனைத்தும் **BLO App-இல் அன்று இரவே பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.**
11. **Blo APP –இல்** பதிவேற்றம் செய்யும்பொழுது முறையாக பதிவேற்றம் செய்ய வேண்டும். அதாவது தமிழில் பெயர் தவறாகவோ ,புகைப்படம் கோணலாகவோ இருத்தல் கூடாது.

# படிவங்கள்

படிவம் -6 (புதியதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க)

படிவம்-6B( வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்க)

படிவம்-7(இறந்த மற்றும்  நிரந்தரமாக வெளியூர் சென்ற வாக்காளர்களை நீக்க)

படிவம்8- (i) குடியிருப்பை மாற்றுவதற்காக

(ii)வாக்காளர் பதிவுகளின் திருத்தம்

(iii) திருத்தம் இல்லாத வாக்காளர் அடையாள அட்டை பெற

(iv) மாற்றுத்திறனாளிகளை  குறிப்பிட.

(v) படிவம் 9 (படிவம் 6-இன் சுருக்கம்)

(vi) படிவம் 10 (படிவம் 7-இன் சுருக்கம்

(vii) படிவம் 11 ( படிவம் 8-இல்  திருத்தம்,  திருத்தம் இல்லாத வண்ண வாக்காளர் அட்டை பெற  மற்றும் மாற்றுத்திறனாளியாக குறிப்பிட இன் சுருக்கம்)

(viii) படிவம் 11 A (  படிவம் 8-இல் ஒரே தொகுதியில் இடமாற்றம் செய்வதின் சுருக்கம்)

(ix) படிவம் 11B (படிவம் 8-ல் வேறு தொகுதியிலிருந்து இடமாற்றம் செய்வதின் சுருக்கம்)

# <u>படிவம் -6</u>

<u>செய்யக்கூடியவை :</u>

1. படிவம் 6 புதியதாக வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு.
2. இதற்கு உண்டான ஆதாரங்கள் சரியாக பார்த்து வாங்க வேண்டும்.
3. 1.1.2006 வரை பிறந்ததேதியை அடிப்படையாகக்கொண்டு இளம் வயதினரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

**<u>பிறந்ததேதி ஆதாரங்கள் :</u>** பள்ளியின் TC, மதிப்பெண் சான்றிதழ், ஆதார் கார்டு, பான்கார்டு, பிறப்பு சான்றிதழ், ஓட்டுனர் உரிமம்

**<u>இருப்பிட ஆதாரங்கள் :</u>** ஆதார்கார்டு , ஓட்டுனர் உரிமம், வீட்டுவரி ரசீது, சமையல் எரிவாயு புத்தகம், வங்கிக்கணக்கு புத்தகம், மின்சார இணைப்பு அட்டை

<u>செய்யக்கூடாதவை :</u>

- படிவம் 6-இல் முறையான ஆதாரங்கள் இல்லாமல் வாங்கவேண்டாம்.
- பாராளுமன்ற தேர்தல் அடுத்த வருடம் வர இருப்பதால் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக பிறந்ததேதியில் மாற்றம் செய்து படிவம் கொடுப்பார்கள் அதனை சரியாக பார்த்து வாங்க வேண்டும்.
- **கண்டிப்பாக கல்யாணப்பத்திரிக்கை ஆதாரம் கிடையாது**
- ஒரு தொகுதியில் இருந்துவிட்டு தங்கள் தொகுதிக்கு வந்து படிவம் 6 கொடுப்பார்கள். அவ்வாறு கொடுப்பவர்களை வேறு தொகுதியில் வாக்காளர் அடையாள அட்டை இருந்தால் அதனை படிவம் 8-ல் வாங்க வேண்டும்.

# படிவம் -7

படிவம்7 இறந்தவர்களை மற்றும் நிரந்தரமாக வெளியூர் சென்றவர்களை நீக்குவதற்காக

**செய்யக்கூடியவை:**

- ஒரு வாக்காளர் பட்டியலில் இறந்தவரை நீக்க வேண்டும் என்றால் முதலில் இறந்தவரின் வீட்டில் ஒரு நபரையோ அல்லது அந்த பாகத்தில் இருக்கும் ஒரு நபரையோ மனுதாரராக எடுத்துக்கொள்ள வேண்டும்.அதாவது முதல் நபரின் வாக்காளர் அடையாள அட்டை எண் மற்றும் தொலைபேசி எண் இருத்தல் வேண்டும்.
- இரண்டாவதாகத்தான் நீக்கப்பட வேண்டிய வாக்காளரை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- இறந்தவருக்கு ஆதாரமாக முறையான இறப்பு சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- நிரந்தரமாக வெளியூர் சென்றவருக்கும் இதே போல் செய்ய வேண்டும்.

**செய்யக்கூடாதவை:**

- மனுதாரரின் பெயரை, நீக்கப்பட வேண்டிய நபரின் பெயரை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை எண்ணை மாற்றி எழுதக்கூடாது.
- ஏற்கனவே BLO app-இல் படிவம்7-ல் பதிவேற்றம் செய்திருந்தால் மீண்டும் பதிவேற்றம் செய்ய வேண்டாம்.

# படிவம் -8

## (i) குடியிருப்பை மாற்றுவதற்காக

இதில் 2 வகைப்பாடு உள்ளது

1. ஒரே தொகுதியில் இடமாற்றம் செய்ய
2. வேறு தொகுதியிலிருந்து தங்கள் தொகுதிக்கு இடமாற்றம் செய்ய.

### 1.ஒரே தொகுதியில் இடமாற்றம் செய்ய:

- ஒரே தொகுதியில் இடமாற்றம் செய்வதற்கு அதாவது ஒரு பாகத்தில் இருந்து வேறு பாகத்தில் இடமாற்றுவதற்காகவும் மற்றும் ஒரே பாகத்தில் பிரிவு மாற்றத்திற்காகவும் இந்த படிவம் 8 ஆக பெற வேண்டும்.
- ஒரே தொகுதியில் இடமாற்றம் செய்ய அந்த வாக்காளர் எந்த பாகத்திற்கு செல்கிறாரோ அந்த பாகத்தில் தான் படிவம்-8 பெறப்பட வேண்டும். (**பழைய பாகத்தில் படிவம் பெறக்கூடாது**)

### 2. வேறு தொகுதியிலிருந்து தங்கள் தொகுதிக்கு இடமாற்றம் செய்ய:

- வேறு தொகுதியிலிருந்து தங்கள் தொகுதிக்கு இடமாற்றம் செய்வதற்காக மட்டுமே.
- வேறு தொகுதியிலிருந்து வரும் வாக்காளர்களை அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை எண் கொண்டு படிவம்-8 பெற வேண்டும்.

**<u>இருப்பிட ஆதாரங்கள் :</u>** ஆதார்கார்டு , ஓட்டுனர் உரிமம், வீட்டுவரி ரசீது, சமையல் எரிவாயு புத்தகம், வங்கிக்கணக்கு புத்தகம், மின்சார இணைப்பு அட்டை ,

## <u>(ii)வாக்காளர் பதிவுகளின் திருத்தம்:</u>

- வாக்காளர் பட்டியலில் தற்போதைய உள்ள விவரங்களை திருத்தம் செய்வதற்காக மட்டுமே.

  பெயர், பாலினம், பிறந்ததேதி, புகைப்படம், உறவினர் பெயர்,உறவினர் வகை, தொலைபேசி எண், முகவரி இதில் ஏதேனும் 4 மட்டுமே திருத்தம் செய்ய முடியும்.
- இவை அனைத்திற்கும் முறையான ஆதாரங்கள் இருத்தல் வேண்டும்

  **(குறிப்பு: பாகம் மாற்றத்திற்கு , பிரிவு மாற்றத்திற்கு இரண்டாவது வகை திருத்தம் செய்ய கொடுக்கக்கூடாது)**

**<u>(iii) திருத்தம் இல்லாத வாக்காளர் அடையாள அட்டை பெற :</u>**

திருத்தம் இல்லாத வண்ண வாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்காக(ஆதாரம் : ஆதார்கார்டு)

**<u>(iv) மாற்றுத்திறனாளிகளை குறிப்பிட:</u>**

ஒரு வாக்காளரை மாற்றுத்திறனாளியாக குறிப்பிடுவதற்காக மட்டுமே

**(ஆதாரம்: மாற்றுத்திறனாளி அடையாள அட்டை)**